முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நாதாந்தசித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

03.05.2019, வெள்ளிக்கிழமை

1. **அருள் வடிவாக நின்று அருளும்**
**ஆறுமுகனார் திருவடி போற்றி**
**பொருள்பட ஞானவழி காட்டும்**
**பூவுலக காப்பின் அவதார ஞானி**
2. ஞானி ஆறுமுக அரங்கமகா
ஞானதேசிகனார் பெருமை கூறி
இனிமைபட நித்ய பிரசன்ன ஆசி
இயம்பிடுவேன் **விகாரி தகர் திங்கள்**
3. **திங்களிலே இருபான் திகதி புகர் வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 20ம் நாள் 03.05.2019, வெள்ளிக்கிழமை)**
**தேசிகனுக்கு நாதாந்தசித்தர் யானும்**
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓம் என்ற பிரணவ சக்தி ஒலியாக
4. ஒலியாக எங்கெல்லாம் கேட்கிறதோ
ஓதிடுவேன் அங்கெல்லாம் அமைதி
பழிபாவம் நேரா பாதுகாப்பு
பண்பான மக்கள் சக்தியாகவும்
5. ஆகவே மாற்றி அருள்வேன்
ஆற்றல்பட அரங்க ஞானியரின்
யுகமாற்ற வேலை துவக்கமாக
ஓங்கார ஓசை எங்கும் பரவவே
6. பரவவே அங்கு பருவமழையும்
பசுமையும் பயிர் வளமும்
பரவவே அங்கு உயிர் பாதுகாப்பு
பசுவை போற்றும் நிலையும் ஓங்கும்
7. ஓங்கார ஒலி கேட்க கேட்க
உரைத்திடுவேன் மக்களிடை தயவும்
சிங்காரன் வழிபாட்டின் பலமாக
சேவையும் தருமமும் வளரக் கூடும்
8. கூடுமே எல்லா திக்கிலும்
குமரன் ஆறுமுகன் ஆளுமை
நாடுமே சமதர்ம வளர்ச்சி
நன்னெறி குன்றா பதவி மாந்தர்கள்
9. மாந்தர்கள் பெருகி இனி
மாண்புள்ள சகல துறைகளும்
சிந்தை தெளிவுபட சேவை
சிறப்பாக நடந்தேறக் கூடும்
10. கூடவே இந்த அற்புதம் நடக்க
குருராசனாக வந்த அரங்கன்
தொடர்பில் மக்கள் இணைய
தொண்டு வழி சீடர்களாக மாற

11. மாறவே மகத்துவமான மாற்றம்
மக்களை ஞானி ஆக்கி தேற்றும்
ஆறுமுக அரங்கமகான் நோக்கமும்
அகிலத்தில் சடுதி நிறைவேறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நாதாந்தசித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

அருள் கருணையான ஆறுமுகப்பெருமானே, அருளே வடிவமாக நின்று அருள் செய்யும் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி. முருகப்பெருமானின் அவதாரமே அரங்கமகா தேசிகனே ஞானவழி காட்டி இவ்வுலகை வழிநடத்துகின்ற மகா ஞான சற்குருவே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 20ம் நாள் 03.05.2019, வெள்ளிக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே நாதாந்தசித்தர் யானும் முருகப்பெருமானின் ஞானஉலகம் அமைய உரைக்கின்றேன் என்கிறார் மகான் நாதாந்தசித்தர்.

ஓம் என்கிற பிரணவ சக்தியாகிய ஓங்காரசக்தி முருகப்பெருமானின் திருநாமங்களாக எங்கெல்லாம் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் பழிபாவம் நேர்ந்திடாது அருள் பாதுகாப்பை பெற்று அமைதி நிலவும், மக்களெல்லாம் முருகப்பெருமானின் பாதுகாப்பை பெறுவார்கள். மக்கள் சக்தியை பண்புள்ள மக்கள் சக்தியாக மாற்றி அருள்வேனப்பா.

மிகுந்த ஆற்றலுடன் முருகப்பெருமானின் தலைமையில் உண்டாகும் ஞானயுக மாற்ற வேலைகள் எல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக துவங்கி ஓங்கார ஓசை உலகமெங்கும் பரவி வருகின்றதப்பா.

ஓங்கார ஓசை நாட்டினில் பரவபரவ, அங்கெல்லாம் பருவமழை தவறாது பெய்து பசுமையும் பயிர்வளமும் பெருகி விவசாயம் சிறக்கும். அங்கெல்லாம் எல்லா உயிர்களும் முருகப்பெருமானின் அருளால் பாதுகாக்கப்படும். பசுக்களை போற்றி பாதுகாக்கும் நிலையும் பெருகிடும்.

முருகப்பெருமானின் திருநாமங்கள் ஒலித்திட ஒலித்திட மக்களின் காதுகளில் முருகப்பெருமானின் திருநாம ஓசைகள் கேட்க கேட்க, கேட்கின்ற மக்களின் மனோநிலைகள் நல்ல மாற்றங்களை அடைந்து அவர்களுள் தயவு பெருகிடும், தயவு பெருகி முருகப்பெருமானை அவர்களெல்லாம் வழிபாடுகளை செய்து தருமங்களை செய்திடுவர். முருகப்பெருமானின் திருநாமங்கள் ஒலிக்க ஒலிக்க ஆங்கே தயவு பெருகி தருமம் வளரும்.

முருகப்பெருமானின் வழிபாடுகள் எல்லா திசைகளிலும் பெருகி எங்கெங்கும் முருகப்பெருமானின் திருநாம ஓசை கேட்க கேட்க, உலகமெங்கும் முருகப்பெருமானின் ஆட்சி உண்டாகும். முருகப்பெருமானின் அருள் ஞான ஆட்சியினால் சமதர்மம் பெருகிடும். மக்களெல்லாம் நல்நெறி வழி சென்று நன்னெறி குன்றாமல் தர்மத்தின் வழி நடக்கின்ற பதவியாளர்கள் நாட்டினில் அதிகமாகி நாட்டின் சகல துறைகளும் மாண்புள்ள துறைகளாக ஆகி நல்ல வளர்ச்சியை அடைந்திடும்.

எல்லா துறை பதவியாளர்களும் சிந்தை தெளிவு பெற்று தன்னலமற்று பொதுநலமாய் சேவை மனப்பான்மையுடன் செயலாற்றுவார்கள். அவர்களது சமுதாய தொண்டு சிறப்புடன் அமைந்திடும். இவ்விதமான அருட்பெரும் மாற்றங்களை உலகினில் உருவாக்கி ஞானஆட்சி அமைய அற்புதங்கள் செய்திடவே அவதாரமாக வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பற்றி பின்தொடர அரங்கன் சேவைகளில் மக்களெல்லாம் இணைந்து செயல்பட தொண்டுகள் செய்து அரங்கரின் சீடர்களாக மாறிட உலகமெலாம் பல அற்புதங்கள் நிகழ்ந்து மகத்துவம்மிக்க மாற்றங்கள் எல்லாம் உருவாகி ஞானஅருள் பெருகி மக்கள் எல்லாம் ஞானிகளாக ஆகி தேறிடுவார்கள்.

**மக்களை ஞானிகளாக ஆக்கி கடைத்தேற்றும் மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அவதார நோக்கமும் இவ்வுலகினில் விரைந்து நிறைவேறும்** எனக் கூறுகிறார் மகான் நாதாந்தசித்தர்.

–சுபம்–